**நகராட்சி அலுவலகம்,**
**சாத்தூர்.**
**நாள்: 23.12.2022**
**-----------------------------------------**

## சாத்தூர் நகர்மன்றம் சாதாரணக் கூட்டம் அறிவிப்பு

**கூட்டம் எண். 10**

**நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2053ம் வருடம் மார்கழி 11 ஆம் நாள் 2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26.12.2022ம் தேதியன்று திங்கள்கிழமை மதியம் 4.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நகர்மன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

**நகர்மன்றத் தலைவர்**
**சாத்தூர் நகராட்சி.**

**பொருள் எண்.1**

இந்நகர்மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை (ID Card) தயார் செய்யப்பட்ட வகைக்கு செலவு தொகை ரூ.4800/-னை வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 1481/2016/ சி2)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.144, நாள்: 26.12.2022**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட புதிய வார்டு எண்.4 எல்.ஐ.சி ஆபிஸ் தெருவில் குறுக்கே உள்ள சிறு பாலம் தற்போது பெய்த மழையின் காரணமாக பாலம் தூர்ந்து போய் முற்றிலும் சேதமடைந்துள்ளது. இதனால் கழிவுநீர் செல்லாமல் பொது சுகதாதர கேடு ஏற்பட்டு வருகிறது. எனவே உடனடியாக பாலத்தினை புதியதாக அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.1,60,000/-க்கு மன்றத்தின் அனுமதிகோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

பொது மக்களின் அத்தியாவசியம் கருதி மேற்கண்ட பணியினை மேற்கொள்ளுவதற்கு மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.870/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.145, நாள்: 26.12.2022**
**தீர்மானம்: மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.3</u>**

சாத்தூர் நகராட்சியில் நடைபெறும் திட்ட பணி விபரங்களை சாதனை மலராக தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்தவைக்கு விளம்பர கட்டணம் ரூ.26,250/- வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 322/2018/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.146, நாள்: 26.12.2022**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.4</u>**

சாத்தூர் நகராட்சிக்கு 2022-2023ம் ஆண்டுக்கு கலைஞர் நகர் புற மேப்பட்டு திட்டத்தின் கீழ் ரூ.47.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழஙகல் துறையின் அராசணை எண்.23 நாள்: 01.12.2022-ல் பின்வருமாறு நிதி ஒதுக்கீடு செய்து திட்ட நிதியாக ரூ.33.00 இலட்சமும், நகராட்சி பங்கு தொகையாக ரூ.14.00 இலட்சம் செலுத்தி பணியினை மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 288/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.147, நாள்: 26.12.2022**
**தீர்மானம்: மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 5</u>**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட புதிய வார்டு எண்.4 எல்.ஐ.சி ஆபிஸ் தெருவில் குறுக்கே உள்ள பாலத்தினை புதியதாக அமைப்பதற்கு பணி மேற்கொள்ளுவதற்கு 06.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு. சுந்தரமகாலிங்கம் - மதிப்பீட்டை விட 0.04 சதவீதம் குறைவு
2. திரு.முத்துசாமி , - மதிப்பீட்டை விட 0.18 சதவீதம் அதிகம்

<u>அலுவலக குறிப்பு:</u>

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.சுந்தரமகாலிங்கம் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தபுள்ளியினை பணியின் அவசர அவசியம் கருதி மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண். 870 /2022/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.148, நாள்: 26.12.2022**
**தீர்மானம்: மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 6</u>**

சாத்தூர் நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை ஸ்ரீ கங்கா எலக்ட்ரிக்ல்ஸ் திருநெல்வேலி மூலமாக 01.09.2021 முதல் 31.08.2022 வரை பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது ஒப்பந்தகாலம் முடிவடையும் நிலையில் உள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் நகராட்சிகளில் உள்ள குடிநீர் பணி, பாதாளச் சாக்கடை பணிகள், பொது சுகாதார பணிகள் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் தனியார் நிறுவனங்கள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை பார்ப்பதற்கு நிரந்தர பணியாளர்கள் எவரும் இல்லாத நிலையில் அரசினால் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்ததாரரை நியமனம் செய்யும் வரை ஏற்கனவே பார்த்து வரும் ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்ல்ஸ் திருநெல்வேலி நிறுவனத்திற்கு நான்கு மாதங்களுக்கு மட்டும் கால நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

அ) தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே பார்த்து வரும் ஒப்பந்தக்காரருக்கே மூன்று மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்க இந்நகர்மன்ற தீர்மான எண்.81 நாள்: 25.08.2022-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆ) தற்போது அளிக்கப்பட்ட கால அவகாசம் முடிவடைவதால் மேலும் நான்கு மாதங்களுக்கு மார்ச் 2023 வரை கால நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கவும், மேற்கண்ட பணியினை 2021-2022-ம் ஆண்டிற்கு ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட விலைவிகித்திற்கே பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

இ) நான்கு மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்தாலும் அரசினால் இடைப்பட்ட காலத்தில் தனியார் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் உரிமம் வழங்கும் பட்சத்தில் பழைய ஒப்பந்தக்காரர் மறுப்பு ஏதும் தெரிவிக்காமல் தமது ஒப்பந்த காலத்தினை முடித்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 957/2019/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.149, நாள்: 26.12.2022**
**தீர்மானம்: அலுவலகக் குறிப்பிற்கு மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 7</u>**

விருதுநகர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அவர்களின் கடிதம் ந.க.எண். 423/செ.ம.தொ/2022 அ நாள்: 02.12.2022-ல் தமிழக அரசின் திட்டங்கள் குறித்த சாதனைகள் ஆகியவற்றினை விளம்பரங்களாக வடிவமைத்து திறந்த வெளியில் விளம்பரம் செய்ய அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேற்கண்ட கடிதத்தில் மகளிருக்கான இலவச பேருந்து பயண திட்டம், முதலமைச்சர் காலை உணவு திட்டம் மற்றும் புதுமை பெண் திட்டத்தினை கீழ்க்கண்ட இடங்களில் 10 x 12 அளவில் டிஜிட்டல் பேனர் வழியாக விளம்பரம் செய்ய அறிவுறுத்தப்பட்டது. அதன்படி விளம்கரம் செய்யும் பொருட்டு உரிய கால அவகாசம் இல்லாததால்

மேற்கண்ட பணியினை தமிழ்நாடு மாவட்டம் நகராட்சிகள் சட்டம் பிரிவு 15-ல் கீழ் மேற்கண்ட பணியினை செய்யவும் அதற்கான செலவு தொகை ரூ.34,000/- மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்

1. பேருந்து நிலையம் எதிர்புறம்
2. முக்காரந்தல்
3. பைபாஸ் ரோடு

.<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
(ந.க.எண். 882 /2022 எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.150, நாள்: 26.12.2022**
**தீர்மானம்: மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண். 8</u>**

சாத்தூர் நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு நகராட்சி நிர்வாக துறையின் மானிய கோரிக்கையின் போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் பொருட்டு புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான இடத்தினை தேர்வு செய்து அரசின் ஒப்புதல் பெறவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் இடத்திற்கு கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான வடிவமைப்பு வரைபடத்தினை தயார் செய்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் ஒப்புதல் பெறுவதற்கும் அதற்கான செலவு தொகைக்கும்
2. பேருந்து நிலையம் அமைவிடத்தில் உரிய மண் பரிசோதனை மற்றும் இதர சான்றினை அரசு பொறியியல் கல்லூரி மூலம் பெறுவதற்கும் அதற்கான செலவு தொகைக்கும்
3. புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான திட்ட மதிப்பீட்டினை தனியார் (Consultancy) நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளுவதற்கும் அதற்கான செலவு தொகைக்கும்

மேற்கண்ட பணியினை அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.288 /2022/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.151, நாள்: 26.12.2022**
**தீர்மானம்: அலுவலகக் குறிப்பிற்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 20789/2021/UPA, நாள்:08.11.2022-ல் நகர்பகுதியில் சாலையோர வியாபாரிகளுக்கு அவர்களின் வாழ்வாதரத்தை மேம்படுத்தும் பொருட்டு கீழ்க்கண்டவாறு வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்

| வ.எண். | வாகன விபரம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|
| 1 | பழங்கள் மற்றும் காய்கறிகள் விற்பனைக்கு 6 வாகனங்கள் (1 வாகனத்தின் விலை - ரூ.98,000) | ரூ. 5,88,000 |
| 2 | உணவு வகை விற்பனை 2 வாகனங்கள் (1 வாகனத்தின் விலை - ரூ.98,000) | ரூ. 1,96,000 |
| 3 | பூக்கள் விற்பனைக்கு 2 வாகனங்கள் (1 வாகனத்தின் விலை - ரூ.20,000) வாகனம் - | ரூ. 40,000 |
| | **மொத்தம்** | **ரூ. 8,24,000** |

.அலுவலக குறிப்பு:

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
(ந.க.எண். 922/2022/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.152, நாள்: 26.12.2022**
**தீர்மானம்: மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 10**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 22083/2022/SBM-3, நாள்: 13.12.2022-ல் சாத்தூர் நகராட்சிக்கு 2022-2023-ம் ஆண்டிற்கு தூய்மை பாரத இயக்கம் (SBM 2.0) திட்டத்தின் கீழ் மத்திய அரசின் மானியமாக ரூ.21.00 இலட்சமும், மாநில அரசின் மானியமாக ரூ.14.00 இலட்சமும், நகராட்சியின் பங்கு தொகையாக ரூ.8.00 இலட்சத்தினை செலுத்தி ரூ.43.00 இலட்சம் மதிப்பிட்டில் புதியதாக வள மீட்பு மையம் (RRC) அமைப்பதற்கான திட்ட கருத்துருவினை சமர்ப்பித்து பணியினை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் மேற்கண்ட பணியினை செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

.அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 917/2022/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.153, நாள்: 26.12.2022**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 11</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டு பகுதிகளில் அமைந்துள்ள 12,678 குடியிருப்புகள், 1309 வணிக நிறுவனங்கள், 259 தொழிற்சாலைகள் ஆகியவற்றிலிருந்து தினசரி 10.40 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் தினசரி உற்பத்தியாகிறது. இதில் மக்கும் தன்மையுள்ள ஈரக்குப்பைகள் 6.30 மெட்ரிக் டன், மக்காத உலரக்கழிவுகள் 3 மெட்ரிக் டன், மேலும் வீடுகளில் சேகரமாகும் அபாயகரக் கழிவுகள் 0.1 மெட்ரிக் டன் இவ்வாறு உற்பத்தியாகும் மேற்படி கழிவுகள் இந்நகராட்சி தூய்மைப் பணியாளர்கள் மற்றும் தனியார் ஒப்பந்த பணியாளர்கள் மூலம் தினசரி வீடு வீடாக மற்றும் வணிக நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் கழிவுகளை வார்டு வாரியாகவும் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் வாரியாகவும் குப்பையின் அளவை எடை போட்டு தினசரி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட எடை போடும் பணிகளுக்காக எட்டு எண்ணம் வில் தராசும் மற்றும் நுண் உரமாக்கும் மையத்தில் உற்பத்தியாகும் உரம் எடை போடுவதற்கு இரண்டு எண்ணம் பிளாட் பார்ம் தராசும் தேவைப்படுகிறது. மேற்படி தராசுகளை உள்ளூர் விலைப்புள்ளி பெற்று வாங்குவதற்கும் இதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.50,000/-க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 932/2022/H1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.154, நாள்: 26.12.2022**

**தீர்மானம்: மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 12</u>**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிக்காக தினசரி வீடுவீடாக சென்று திடக்கழிவுகளை சேகரிப்பதற்ககாக பயன்படுத்தப்பட்டு வந்த 50 எண்ணம் மூன்று சக்கர தள்ளு வண்டிகளில் சக்கரங்கள் மற்றும் இதர பாகங்கள் பழுது நீக்கம் செய்தல் மற்றும் புதிய சக்கரங்கள் பொருத்தும் பணிக்காக ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 106 நாள் 30.09.2022ம் தேதியன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி பணிக்காக 24.11.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | சமர்ப்பித்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|
| 1. | THIRUPATHY GRIL WORKS<br>18/33, MATHANGOVIL STREET, SRIVILLIPUTHUR | ரூ.174000/- |

| | | |
|---|---|---|
| 2. | RAGUMAN IRON WORKS<br>201, RAJAJ ROAD, SRIVILLIPUTHUR | ரூ.172500/- |

<u>அலுவலக குறிப்பு</u>

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ள RAGUMAN IRON WORKS 201, RAJAJ ROAD, SRIVILLIPUTHUR நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதிபெற்று பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.733/2022/.எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.155, நாள்: 26.12.2022**

**தீர்மானம்: அலுவலகக் குறிப்பிற்கு மன்றம் ஏற்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 13</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரபிரிவு சார்பாக அவ்வபோது நடத்தப்படும் விழிப்புணர்வு நிகழ்வுகள், மருத்துவ முகாம்கள், உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு தேவையான விளம்பரப் பொருட்கள் பிளக்ஸ், பேனர், துண்டுப்பிரசுரம், நோட்டீஸ்கள், வால் போஸ்ட்கள், ஸ்டிக்கர்கள், சான்றிதழ்கள் அச்சிட்டு தயார் செய்து வழங்குதல், கேடயம் தயார் செய்து வழங்குதல், மற்றும் திட்டப்பணிகள் அறிக்கை அச்சிட்டு ஸ்பைரல் பைண்டிங் செய்து வழங்குதல் மற்றும் ஆடியோ ரெக்கார்டிங் செய்து பென்டிரைவில் வழங்குதல் உள்ளிட்ட பணிகளுக்கான விலைப்புள்ளிகள் கோருவதற்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 88 நாள் 30.09,2022ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிகளுக்காக 03.10.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

| **வ. எண்** | **விபரம்** | **SPOT LIGHT STUDIOS 172, PARASAKTHI COLONY SIVAKASI** | **SATHY ADS 2/95 ARUMOZHI BUS SERVICE, SUMANGALI MANDAPAM NEAR, SATTUR** | **JOTHI ARTS 1/634, NADAR WEST STREET, SIVAKASI** |
|---|---|---|---|---|
| | | **ஒன்றுக்குரிய தொகை ரூ (GST நீங்கலாக)** | | |
| 1 | பிளக்ஸ் பேனர் (1X1 சதுரஅடி) | 33 | 30 | 35 |
| 2 | பிளக்ஸ் பேனர் (தரமான படங்கள் வாசகங்கள் அடங்கியது) (1X1 சதுரஅடி) | 43 | 40 | 45 |
| 3 | Back Light பிளக்ஸ் பேனர் (வாசகங்கள் அடங்கியது) (1X1 சதுரஅடி) | 64 | 60 | 67 |
| 4 | ஸ்டார் பிளக்ஸ் பேனர் (படங்கள் வாசகங்கள் அடங்கியது) (1X1 சதுரஅடி) | 52 | 50 | 55 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | Foam With Sticker (வாசகங்கள் அடங்கியது) (1X1 சதுரஅடி) | 184 | 180 | 187 |
| 6 | ஸ்டிக்கர் 12x18 (படங்கள் வாசகங்கள் அடங்கியது) (1X1 சதுரஅடி) | 79 | 75 | 84 |
| 7 | ஸ்டிக்கர் Eco Print (படங்கள் வாசகங்கள் அடங்கியது) (1X1 சதுரஅடி) | 144 | 140 | 154 |
| 8 | வினையல் & லேமினேசன் (படங்கள் வாசகங்கள் அடங்கியது) (1X1 சதுரஅடி) | 103 | 100 | 109 |
| 9 | A3 சைஸ் நோட்டீஸ் (Multi Colour) 1000 எண்ணிக்கை | 4550 | 4500 | 4640 |
| 10 | A3சைஸ் நோட்டீஸ் (Single Colour) 1000 எண்ணிக்கை | 1930 | 1800 | 1985 |
| 11 | A4 சைஸ் நோட்டீஸ் (ஒரு கலர் முன் / பின் பிரிண்ட்) 1000 எண்ணிக்கை | 2520 | 2400 | 2590 |
| 12 | A4 சைஸ் நோட்டீஸ் (Multi Colour) 1000 எண்ணிக்கை | 2860 | 2800 | 2980 |
| 13 | Legal Size சைஸ் நோட்டீஸ் (Single Colour) 1000 எண்ணிக்கை | 2340 | 2200 | 2560 |
| 14 | Legal Size சைஸ் நோட்டீஸ் (ஒரு கலர் முன் / பின் ஒரு கலர் பிரிண்ட்) 1000 எண்ணிக்கை | 3120 | 3000 | 3250 |
| 15 | 100 எண்ணிக்கை வால் போஸ்டர் 3X2 | 3960 | 3800 | 4100 |
| 16 | பிளக்ஸ் - பேனர் கம்பி பைப்பில் செய்துதர (1X1 சதுரஅடி) | 190 | 160 | 230 |
| 17 | A4 சைஸ் பேப்பர் கலர் பிரிண்ட் ஒன்றுக்கு | 30 | 20 | 40 |
| 18 | Legal Size சைஸ் பேப்பர் கலர் பிரிண்ட் ஒன்றுக்கு | 40 | 30 | 45 |
| 19 | A3 சைஸ் பேப்பர் கலர் பிரிண்ட் ஒன்றுக்கு | 55 | 50 | 60 |
| 20 | A4 சைஸ் பேப்பர் Black & white பிரிண்ட் ஒன்றுக்கு | 4 | 2 | 5 |
| 21 | Legal Size சைஸ் பேப்பர் Black & white பிரிண்ட் ஒன்றுக்கு | 6 | 3 | 7 |
| 22 | A3 சைஸ் பேப்பர் Black & white பிரிண்ட் ஒன்றுக்கு | 13 | 10 | 15 |
| 23 | ஸ்பைரல் பைண்டிங் 50 பக்கம் வரை | 95 | 80 | 100 |
| 24 | ஸ்பைரல் பைண்டிங் 100 பக்கம் வரை | 160 | 150 | 180 |
| 25 | கேடயம் தயார் செய்து வழங்குதல் (Small Size) ஒன்றுக்கு | 480 | 450 | 500 |
| 26 | கேடயம் தயார் செய்து வழங்குதல் (Medium Size) ஒன்றுக்கு | 600 | 550 | 620 |
| 27 | A4 சைஸ் மல்டிகலர் காட்போர்டு | 70 | 60 | 80 |

| | | | | |
|---|---|---|---|---|
| | சான்றிதழ் தயார் செய்து வழங்குதல் ஒன்றுக்கு | | | |
| 28 | ஆடியோ ரெக்கார்டிங் செய்து பென்டிரைவில் வழங்குதல் | 750 | 700 | 790 |

<u>அலுவலக குறிப்பு</u>

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள **SATHYADS 2/95 ARUMOZHI BUS SERVICE, SUMANGALI MANDAPAM NEAR, SATTUR** நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம், தூய்மை இந்தியா இயக்கம், திடக்கழிவு மேலாண்மை குறித்து பொது மக்கள் மற்றும் வணிகர்களிடையே விழிப்புணர்வு பணியின் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண் 655/2022/.எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.156, நாள்: 26.12.2022**
**தீர்மானம்: அலுவலகக் குறிப்பிற்கு மன்றம் ஏற்கப்பட்டது.**

<u>**பொருள் எண். 14**</u>

சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட 24 வார்டு பகுதிகளில் அமைந்துள்ள 12,678 குடியிருப்புகள் மற்றும் நகர்பகுதிகளில் அமைந்துள்ள 1309 வணிக நிறுவனங்களிலிருந்து தினசரி 10.4 டன் அளவிற்கு குப்பைகள் உருவாகிறது. மக்கும் குப்பைகளை நகர் பகுதிகளில் கீழ்க்கண்ட 3 இடங்களில் அமைந்துள்ள நுண் உரமாக்கும் மையம் (Micor Compost Center) மூலம் உரமாக்குவதற்கான செயல்முறைகள் நடைமுறைபடுத்தப்பட்டு 40 முதல் 45 தினங்களில் உரமாக மாற்றப்படுகிறது.

| வ.எண் | நுண்உரமாக்கும் மையம் அமைந்துள்ள இடம் | உரமாக்கும் திறன் |
|---|---|---|
| 1 | நகராட்சி உரக்கிடங்கு | 3 டன் |
| 2 | நென்மேனி ரோடு | 3 டன் |
| 3 | மேலக்காந்தி நகர் | 3 டன் |

மேற்கண்ட நுண்உரமாக்கும் மையங்களில் மக்கும் கழிவுகளை உரமாக மாற்றுவதற்கு E.M.Solution நுண்ணுயிர் திரவம் தயாரிப்பு செய்திட ஒரு தடவைக்கு 2

லிட்டர் தயிர் மற்றும் 5 கிலோ வெல்லம் தேவைப்படுகிறது. ஒவ்வொரு பசுமை நுண்உரக்குடில்களிலும் எப்போதும் மூன்று பேரல்களில் தயார் செய்து, சுழற்சி முறையில் பயன்படுத்தப்பட வேண்டும்.

இதன்படி, இந்நகராட்சியில் செயல்பட்டு வரும் 3 பசுமை உரக்குடில்களுக்கும் தேவையான தயிர் மற்றும் வெல்லம் தேவைக்கேற்ப அவ்வப்போது வெளிச்சந்தையில் வாங்க வேண்டிய சூழ்நிலை அடிக்கடி ஏற்படுகிறது. இதற்கான உத்தேச செலவினத்தொகை மாதம் ஒன்றிற்கு ரூ.6,000/- வீதம் தேவைப்படுகிறது. எனவே பசுமை நுண் உரக்குடில்களுக்கு நுண்உரத்திரவம் தயாரிக்க தேவைப்படும் வெல்லம் மற்றும் தயிர் ஆகியவற்றை தூத்துக்குடி மாவட்டம் கிளினிங் பொருட்கள் உற்பத்தியாளர்கள் சேவை மற்றும் தொழிற்கூட்டுறவு சங்கம் லிட்., மூலம் வாங்கிக்கொள்ள அனுமதியும், இதற்கான செலவினத் தொகைக்கும் மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 931/2022/H1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.157, நாள்: 26.12.2022**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 15</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டு பகுதிகளில் அமைந்துள்ள 12,678 குடியிருப்புகள் மற்றும் நகர்பகுதிகளில் அமைந்துள்ள 1309 வணிக நிறுவனங்களிலிருந்து தினசரி 10.4 டன் அளவிற்கு மக்கும் குப்பைகள் உருவாகிறது. மக்கும் குப்பைகளை நகர் பகுதிகளில் கீழ்க்கண்ட 3 இடங்களில் அமைந்துள்ள நுண் உரமாக்கும் மையம் (Micor Compost Center) மூலம் உரமாக்குவதற்கான செயல்முறைகள் நடைமுறைபடுத்தப்பட்டு 40 முதல் 45 தினங்களில் உரமாக மாற்றப்படுகிறது.

| வ.எண் | நுண்உரமாக்கும் மையம் அமைந்துள்ள இடம் | உரமாக்கும் திறன் |
|---|---|---|
| 1 | நகராட்சி உரக்கிடங்கு | 3 டன் |

| | | |
|---|---|---|
| 2 | நென்மேனி ரோடு | 3 டன் |
| 3 | மேலக்காந்தி நகர் | 3 டன் |

மேற்கண்ட நுண்உரமாக்கும் மையங்களில் மக்கும் கழிவுகளை உரமாக மாற்றுவதற்கு தேவையான E.M.Solution நுண்ணுயிர் திரவம் தயாரிப்பு செய்வதற்கு 150லி கொள்ளளவு கொண்ட பிளாஸ்டிக் பேரல் 3 எண்ணம் ஒவ்வொரு மையத்திற்கும் தேவைப்படுகிறது. மேலும் குடியிருப்பு பகுதியிலிருந்து சேகரமாகும் ஈரக்கழிவுகளை தனியாக சேகரிப்பதற்காக 6 பிளாஸ்டிக் பேரல்கள் தேவைப்படுகிறது. ஆகவே மேற்கண்ட உரமாக்கும் பணிகளுக்கு தேவையான 15 பிளாஸ்டிக் பேரல்களை உள்ளூர் விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்வதற்கும், இதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.25,000/-க்கும், மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 933/2022/H1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.158, நாள்: 26.12.2022**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

<u>**பொருள் எண். 16**</u>

சாத்தூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வரும் கனரக TN67Z 4628-ம் (Ashok Leyland) 1992-ம் வருடம் வாங்கப்பட்டதாகும். மேற்படி வாகனம் தகுதிச்சான்று பணிகளுக்காக 11.11.2022 முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தகுதிச்சான்று வாங்கும் பொருட்டு மேற்படி வாகனத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பழுதுநீக்கப் பணிகள் மற்றும் உதிரி பாகங்கள் மாற்றுவதற்கான செலவின அதிகமாக இருப்பதாலும் மேற்படி வாகனம் கொள்முதல் செய்யப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டதாலும், மேற்படி வாகனத்தில் அடிக்கடி பழுது ஏற்பட்டு பராமரிப்பு செலவு அதிகமாகி வருகிறது. மேலும் தற்சமயம் மேற்படி வாகனத்திற்கு மாற்றாக கனரக வாகனம் பயன்படுத்தபட்டு வருவதாலும். மேற்படி வாகனத்தை கழிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 934/2022/H1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.159, நாள்: 26.12.2022**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

<u>**பொருள் எண். 17**</u>

சாத்தூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு தூய்மைப் பணியாளர்களுக்கு 2022-2023ம் வருடத்திற்கு தேவையான சோப்புகள் A1382, விருதுநகர் மாவட்ட நுகரவோர் கூட்டுறவு, சாத்தூர் மொத்த பண்டக சாலையில் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,000/-ம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 754/2015/H1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.160, நாள்: 26.12.2022**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 18</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டு பகுதிகளில் அமைந்துள்ள 12,678 குடியிருப்புகள், 1309வணிக நிறுவனங்கள், 259 தொழிற்சாலைகள் ஆகியவற்றிலிருந்து தினசரி 10.40 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் தினசரி சேகரமாகிறது. தினசரி நகராட்சி தூய்மை பணியாளர்கள் மற்றும் தனியார் ஒப்பந்த பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது. இவற்றில் மக்கும் கழிவுகள் - 6.30 மெட்ரிக் டன் மற்றும் மக்காத கழிவுகள் - 4.10 மெட்ரிக் டன் ஆகும்.

இந்நகராட்சிக்குட்பட்ட தினசரி சேகரமாகும். 5.70 மெட்ரிக் டன் மக்கும் கழுவுகளை இந்நகராட்சியின் 3 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நுண் உரக்குடில்கள் மூலம் உரமாக்கப்பட்டு வருகிறது. ஆனால், தினசரி சேகரமாகும் 3.80 மெட்ரிக் டன் மக்காத கழிவுகளான பிளாஸ்டிக் கழிவுகள், ரப்பர் கழிவுகள், துணிக்கழிவுகள், கண்ணாடி பாட்டில்கள் உள்ளிட்ட கையாள்வது மற்றும் மக்கச்செய்வது பெரும் சவாலாக உள்ளது.

இந்நகராட்சியில் 24 வார்டுகளில் தினசரி சேகரமாகும் மக்காத பிளாஸ்டிக் கழிவுகளை தனியாக சேகரித்து தனியார் பிளாஸ்டிக் மேலாண்மை நிறுவனத்தின் மூலம் சிமெண்ட் ஆலை மற்றும் பிளாஸ்டிக் மறுசுழற்சி செய்யும் நிறுவனங்களுக்கு அனுப்பும் பொருட்டு மேற்படி பிளாஸ்டிக் கழிவுகளை தினசரி பேலிங் மிசின் மூலம் கட்டு கட்டாக கட்டி உரக்கிடங்கில் சேமித்து வைக்கவும் பேலிங் மிசின்மூலம் பிளாஸ்டிக் கழுவுகளை பிரஸ் பண்ணி கட்டுவதற்கு தேவையான பிளாஸ்டிக் ரோப் மற்றும் கிளிப் நான்கு மாத தேவைக்கு வாங்குவதற்கும் இதற்கான உத்தேச தொகை ரூ.15000-க்கும் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று வாங்குவதற்கும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்: 930/2022/H1)**

**நகர்மன்றத் தீர்மானம் எண்.161, நாள்: 26.12.2022**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 19</u>**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பெருமாள் கோவில் வடக்கு ரத வீதியில் உள்ள கட்டணக் கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 2022-2025ம் ஆண்டிற்கு மூன்றாண்டு குத்தகை இனத்திற்கு 09.12.2022ம் தேதி மறுபொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்து கொள்ளவில்லை. பொது ஏலத்தில் மட்டும் கீழ்க்கண்ட விபரத்தின்படி கலந்து கொண்டவர்களில் உச்ச ஏலக்கேள்வி தொகையினை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி | ஏலக்கேள்வி தொகை ரூ. | |
|---|---|---|---|
| | | கூடுதல் | குறைவு |
| 1 | திரு.ஏ.பெருமாள்சாமி,<br>36, பிறவிப்பட்டி, நல்லன்செட்டிபட்டி,<br>சாத்தூர். | -- | 1,68,000 |
| 2 | திரு.முனியாண்டி,<br>232, சாமியார் காலனி,<br>கத்தாளம்பட்டி, சாத்தூர். | -- | 1,69,000 |
| 3 | திரு.டி.அசோக், த/பெ.வேலுச்சாமி,<br>34, பெருமாள் கோவில் வடக்கு மாட வீதி,<br>சாத்தூர். | 1,70,000 | -- |

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மேற்கண்ட பொது ஏலத்தில் கலந்து கொண்ட குத்தகைதாரர்களில் திரு.முனியாண்டி என்பவரது ஏலக்கேள்வி தொகை ரூ.1,69,000/-ஐ விட திரு.டி.அசோக் என்பவரது உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.1,70,000/-ம் கூடுதலாக இருப்பதால் மேற்படி பொது ஏலக்கேள்வி தொகையினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1064/2017/சி2)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.162, நாள்: 26.12.2022**

**தீர்மானம்: மன்றம் ஏற்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 20</u>**

சாத்தூர் நகராட்சி சிவன்கோவில் தெற்கு ரத வீதி 3வது சந்து நகராட்சி அலுவலகம் மேற்கு பகுதியில் 10‘0“x8‘0“ என்ற அளவில் மாற்றுத்திறனாளி பெட்டிக்கடை வைக்க செல்வி.எஸ்.அழகுராணி, த/பெ.சுந்தரம் என்பவர் அனுமதி கோரியுள்ளார். மேற்படி இடம் சவே வார்டு-டி, பிளாக்-14, நகரளவு எண்.180 Part, சிவன் கோவில் தெற்கு ரத வீதி 3வது சந்தின் ஒரு பகுதியில் அமைந்துள்ளது. மேற்படி இடத்தில் மேற்படி இடத்தில் மாற்றுத்திறனாளி பெட்டிக்கடை 10‘0“x8‘0“ என்ற அளவில் அமைப்பதால் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு இல்லை என்பதால் பெட்டிக்கடை அமைப்பதற்கு அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.921/2022/எப்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.163, நாள்: 26.12.2022**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) ச.குருசாமி,**
**நகர்மன்றத் தலைவர்,**